
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார்
# சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு கார்த்திகை-மார்கழி டிம்பர் 2017 முரசு 11 ஒலி 126



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்




இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

### இந்த பயிற்சி முகாமில்...

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானம்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

**நாள்: டிசம்பர் 23, 24 & 25 சனி, ஞாயிறு & திங்கள்**
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**முன்பதிவிற்கு: 8838540176, 7502026565**

### பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் டிசம்பர் 22 – ஆம் தேதி வெள்ளி இரவிற்குள் வந்துவிட வேண்டும் சிறுவர்கள் அனுமதியில்லை.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட், தண்ணீர் பாட்டில் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: ப.ஷர்ட், ஷார்ட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். டிசம்பர் 25 திங்கள் மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
மூன்று நாட்களும் கலந்துகொள்வோர்க்கு மட்டுமே அனுமதி

# பாங்கி தலைவி பெற்றியுரைத்தல்

– நாயகன் நாயகி பாவனை

இயற்கை மெய் அறிவு இன்பமே இன்பம். அவ்வின்பமே சுத்த சிவம். அச்சிவமே நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

உயிர்களாகிய நம்மைப் பிணித்திருக்கின்ற கலை முதலிய எல்லாத் தத்துவங்களையும் ஒழுங்குபெற அமைத்து நடத்தும் வல்லமையுடையவரான நம் சிவபரம்பொருளிடம்; மாற்றுரைக்க முடியாத பொன்போன்று விளங்கும் தனித்தலைவனிடம் நம் வள்ளல் பெருந்தகை தன் காதல் பெருக்கை தோழி மூலம் உரைத்து இறைவனின் திருஉளச் சம்மதத்தை அறிந்து வர தூது அனுப்புவதாக அமைந்துள்ளதே “பாங்கி தலைவி பெற்றி உரைத்தல்” எனும் தலைப்பில் அமைந்துள்ள பாசுரங்கள்.

இறைவனோடு கலந்து அனுபவிக்க வரும் இன்பத்தையும் அவரை அடைய நினைக்கும் ஏக்கத்தையும் திருவுளச் சம்மதம் பெறாமையால் ஏற்பட்ட தவிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைத்துள்ளமை இப்பாசுரங்களின் சிறப்பு. இப்பாசுரங்களின் விளக்கங்களை மட்டும் இங்கே காண்போம்.

***பா.எண்: 4200*** – பொன்னம்பலத்தில் நடம் செய்யும் தனிப் பெருந் தலைவரே! அந்த மன்மதனானவன் தன் ஐங்கணைகளுள் ஒன்றுடன் அமையாது ஐந்து அம்புகளையும் என் தலைவி மேல் செலுத்தியுள்ளான். நின் திருவருளைப் பெறும் அன்பு மேலீட்டால் தன் அரிய உயிரைத் தாங்கியிருக்கின்றாள். இந்த உலகத்தவர் சொல்லும் செருக்குச் சிறிதும் உடையவள் அல்லள். இறைக்கலப்பால் பெரு வெள்ளத்தில் சூழ்வதற்குக் கருத்து வேறுபாடிலள் என்றாலும் இவள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவளோ எக்குலத்தவளோ என்று அறிய விரும்பினால் இவளது சமயமும் குலமும் எல்லாம் சிவமயமே ஆகும். இது தங்கட்கு உடன்பாடு தானே! கூறியருள வேண்டுகிறேன்.

***குறிப்பு:*** ஒரு பக்தனுக்கு சமயமும் குலமும் இறைவன் மட்டுமே. இங்கு சிவம் என்பதன் பொருள் சச்சிதானந்தம். சச்சிதானந்த மென்பது சத்து, சித்து, ஆனந்தம்; “சிகரம் எல்லா முள்ளதாய் விளங்குவது, வகரம் எல்லாம் விளங்குவதாயுள்ளது, மகரம் இரண்டினாலும் நிரம்பிய இன்பம்” எனும் தத்துவ உண்மையேயாம்.

***பா.எண்: 4203*** – சிறந்து விளங்கும் அம்பலத்தில் வாழ்கின்ற பெருந் தலைவரே! இவ்வுலகில், அற்பமானவரே நிலையில்லாத மண்ணுலக இன்பத்தை அடைய விரும்புவர். புண்ணியம் செய்த ஞானியரே சிவ போகத்தை பெறுதற்கு விரும்புவர். இவருள் புல்லவர்களைக் கல்போன்றவர் என்றும் புண்ணியரை மணிபோன்றவர் என்றும்

*கொண்டவள் ஆதலால் கனவிலும் நிலையாத பொய் உறவுகளைச் சிறிதும் நினையாள். மேலும்,* **நல்ல பண்புடையவரைக் காணினும் அவர்கள் பரம்பொருளான நின்னை எண்ணாதவராயின் அவர்களை நல்லவர்களாக இவள் மதிக்கவில்லை.** *என் தலைவியான இவளை அடைவதற்கு உமக்குத் திருவுள்ளம் உண்டாகுமோ! எல்லாம் வல்ல பெருமானே, எனக்கு கூறியருளல் வேண்டும்.*

***குறிப்பு:*** *புண்ணியம் செய்தோர்க்கு மட்டுமே இறையருளைப் பெற்று பேரின்பத்தில் திளைத்து வாழ இச்சை பிறக்கும். மேலும், பண்புடையவராக இருந்தாலும் இறை நாட்டம் உள்ளோராக இருக்க வேண்டும். அத்தகையோருக்கே குருவருள் கிட்டும் எனும் பேருண்மை இப்பாசுர விளக்கத்தால் அறியமுடிகிறது.*

***பா.எண்: 4204*** *– ஞான சபையிலும் பொற்சபையிலும் நடம் செய்கின்ற பெருந் தலைவரே! தத்துவ ஞானிகளும் தத்துவங்களை நடத்துகின்ற தலைவர்களும், மற்றவர்களும் தனித்தனியாகத் தாமே இவள் கண்ணெதிரே வந்து நிற்கின்றனர். இவளோ அவர்களை ஒரு சிறிதும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. இரு கண்களிலும் நீர் பெருக நின்று, என் உயிர்த் தலைவனே! மனம் இசைந்து உயிருடன் உயிராய்க் கலந்து கொண்டு என்னைத் தனக்கு உடைமையாய்க் கொண்டருளிய இறைவனே! என்று உம்மையே நினைத்து ஓதிய வண்ணம் இருக்கின்றாள். “இவளிடம் உம் திருவுள்ளம் யாது?” என்று தெரிவித்தருளல் வேண்டும்.*

***குறிப்பு:*** *“ஒருவரே தெய்வம்” என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க நம் வள்ளல் பெருந்தகையும் “கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்க” என்கிறார். இக்கருத்தை உறுதி செய்வதாய் அமைந்தமை இப்பாடல் விளக்கத்தின் சிறப்பு.*

***பா.எண்: 4205*** *உயர்வுடன் விளங்கும் அம்பலத்தில் வீற்றிருக்கும் பெருந் தலைவரே! எம் மன்னவரே! ஈன்ற தாய் தன்னிடம் வரக் கண்ட தலைவி, அம்மா! நீ அம்பலவாணரான என் கணவர்க்கு அன்பு மிக்க அடியவளாயின் என்னை நெருங்கி வா! இல்லை என்றால் இங்கு நினக்குத் தொடர்பு ஏதும் இல்லை. செல்க! என்று மறுத்துக் கூறுகிறாள். இவளது விருப்பம் எல்லாம் நும் பேரிலேயே ஒன்றிருத்தலால், இவளை முன்போல் ஒரு பேதைப் பெண் என்று எண்ணி இவளிடம் வருதற்குக் காலம் தாழ்த்துதல் கூடாது.* **காலம் தாழ்த்தியேல் விரைந்து உயிரை விட்டுவிடுவாள். விரைந்து வருவது திருவுள்ளமாயின் அதை எமக்குத் தெரிவித்தருள வேண்டும்.**

***பா.எண்: 4206*** *– நிலைபேறுடைய அம்பலத்தில் நடம்இடும் மிக்க*

*பெருந் தலைவரே! உள்ளத்தில் வஞ்சம் இல்லாத அம்பலவாணரான என் கணவரைக் கண்களால் பார்த்தாலன்றி யான்கண் உறங்க மாட்டேன். உணவையும் உண்ணேன். மகிழ்ச்சி கொள்ளேன் எனவுரைக்கும் என்தலைவி, இரவு எனவும் பகல் எனவும் பார்ப்பதில்லை. எதிரே வருபவரை இன்னார் என்று அறியாள். இங்கு துன்பத்தினால் வருந்துகின்றாள். உம் வருகையையே எதிர்பார்த்து இரங்குகின்றாள். இத்தகைய தலைவியிடம் நீ கொண்ட எண்ணம் யாதோ? அதை எனக்குத் தெரிவித்தருளுக. இனி ஓர் இமைப்போது காலம் தாழ்த்தினாலும் இவள் உயிர் தரித்திராள். என்ன செய்வேன்!*

***குறிப்பு:*** *கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால் அழுதகண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா? என்ற பெருமானின் வாக்கிற்கிணங்க அமைந்துள்ளது இப்பாசுர விளக்கம்.*

***பா.எண்: 4207*** *– நிலைபேறுடைய சிறந்த அழகிய அம்பலத்தில் நடம் செய்கின்ற தலைவரே! ஊர்மேல் ஆசை, உடலின் மீது ஆசை, உயிர்மேல் ஆசை, பொருளாசை, உற்றவர் பெற்றவர்களிடம் ஆசை ஆகிய ஆசை ஏதொன்றும் என் தலைவிக்கு இல்லை. உம்மிடம் ஏற்பட்ட ஆசை ஒன்றே கொண்டு பேயால் பற்றப்பட்டவர்கள் போல் பித்துக் கொண்டவளாய் இடைவெளியின்றிப் பேசுகின்றாள். உம் திருப்பெயரையன்றி அயலார் பெயர் செவியில் விழின், நாராசம் பாய்ந்தது போல் துடித்து வருந்துகிறாள். இவையாவும் நாடறிந்தனவாகும். இவளிடம் உமக்கு அன்புளதாயின் அதை எனக்கு உரைத்தருள வேண்டும்.*

***குறிப்பு:*** *நித்தியபேறுடைய இறைவனிடம் நாட்டம் கொள்ள வேண்டுமே அன்றி அநித்திய வஸ்துக்களிடம் நாட்டம் வைத்தல் கூடாது என்பதை வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது இப்பாசுர விளக்கம்.*

***பா.எண்: 4209*** *– "ஞான சபையிலும் பொற்சபையிலும் சிறந்து விளங்குகின்ற எனது துரையே! அம்பலத்தில் ஆடல் செய்யும் என் தனிப்பெருந் தலைவருமாகிய இறைவன் மிக்க அன்புடன் வந்து என் மனத்துள் கலந்து தம் அருட்பெருஞ்ஜோதியான சிவஞானத்தினால், தம்மிடம் உள்ள பெரிய சிவபோகத்தை எனக்குத் தந்திடுவார். இஃது உண்மை. உண்மை. அதனால் அவர் என்னிடம் வந்து என்னைக் கூடி இனிதே இருத்தற் பொருட்டு எம் இல்லத்தில் மலர்கள் நிறைந்த படுக்கையை அலங்கரிக்க எனப் பல முறையும் கூறுகிறாள். இனி நுமது திருவருளின் செம்மையான பயன் விளைதற்கு அமைந்த காலம் எது என உரைக்க வேண்டுகிறேன்" என்று தோழி கூறினாள்.*

***குறிப்பு:*** *"நம்மைப் பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடி பங்கு நம்மீது தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால் ஒருகாலத்திலும் நமக்கு குறைவு நேரிடாது. இது சத்தியம்" என்ற நம் வள்ளல்பெருமானின்*

வாக்கிற்கிணங்க இறைவன் நமக்கு நிச்சயம் அருள் செய்வார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை உடையோராய் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இப்பாசுர விளக்கம்.

கடலோடு கலந்திருக்கும் நதியைப் போல உடலோடு உரைந்திருக்கும் உயிரைப்போல நம் பெருமானார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் மீது கொண்ட பேரன்பு எத்தன்மையது என்பதை இப்பாசுர விளக்கத்தால் உணர்ந்தோம்.

இவ்விதம் நாமும் இறைவன்மீது மாகாதலுற விரும்பினால் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்து புண்ணியத்தை பெற்றவராய் இருக்க வேண்டும். அப்போதுதான் இறைவனை நினைத்து அவரது பேரருளைப் பெற்று பெருஞ்சுகத்தில் வாழலாம்.

**அம்பலத்தே நடம்புரியம் எனதுதனித் தலைவர்**
**அன்புடன்என் உளங்கலந்தே அருட்பெருஞ்ஜோதியினால்**
**தம்பலத்தே பெரும்போகந் தந்திடுவார் இதுதான்**
**சத்தியம் சத்தியம் அதனால் சார்ந்தவர்தாம் இருக்க**
**எம்பலத்தே மலரணையைப் புனைகஎனப் பலகால்**
**இயம்புகின்றாள் இவள் அளவில் இசைந்துநும தருளாம்**
**செம்பலத்தே உறுதருணம் வாய்மலர வேண்டும்**
**சிற்சபைபொற் சபைஓங்கித் திகழ்பெரிய துரையே. – திருஅருட்பா**

**திருச்சிற்றம்பலம்**

திருமூலர் அருளிய

# திருமந்திரத் தேன்



**பத்துத் திசைக்கும் பரம் ஒரு தெய்வம் உண்டு**
**எத்திக்கு இவர் இல்லை என்பது, இனமலர்**
**கொத்துத் திருவடி நீழல் சரண் எனத்**
**தத்தும் வினைக் கடல் சாராது காணுமே.**

பத்துத் திக்குகளிலும் ஒப்பிலாத முழுமுதற்பொருள் ஒருவன் உள்ளான். அவன் இல்லாத திக்குகள் இல்லையென்று அருள் நூல்கள் கூறுகின்றன.

அகத்தே இறைவனை எளிதில் எய்துவிக்கும் நற்பண்புகளான கொல்லாமை, ஐந்தடக்கல், கொள் பொறுமையோடு இரக்கம், நல்லறிவு, மெய்த் தவம், அன்பு ஆகிய எட்டும் அமையப் புறத்தே அவற்றிற்கு இனமாகிய நறுமலர்களைக் கொண்டு திருமுறைப் போற்றித் தொடர்புகன்று திருவடி நீழலே மாறாப் புகலிடம் என்று அருச்சித்தல் வேண்டும். அங்ஙனம் அருச்சிப்பார்க்கு கடல் போன்ற வினைகள் எல்லாம் சாராது என்க.

# மூத்தோர்சொல் அமிர்தம்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அமைச்சர்கள், சான்றோர்களுடைய அறிவுரைகளை அவன் கேட்பதே இல்லை. தனக்கு என்ன தோன்றுகிறதோ அப்படியே நடந்து வந்தான். இதனால் நாட்டில் குழப்பம் நிலவியது.

'அரசனைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வர என்ன செய்வது?' என்று அமைச்சர்கள் ஆலோசித்தனர்.

அவர்களில் ஒருவர் "நம்பி என்ற உழவன் மிகுந்த அறிவுடையவன். அவன் உதவியை நாடுவோம்" என்று கூறி அவனைத் தேடிச் சென்றனர்.

விஷயத்தைக் கேட்டறிந்த நம்பி "அரசவைக்கு நான் நாளை வருகிறேன். என்னை அரசரிடம் அறிமுகம் செய்து வையுங்கள். பிறகு நடப்பதைப் பாருங்கள்" என்றான்.

மறுநாள் அரசவைக்கு வந்தான் நம்பி. இவர் ஒரு சிறந்த அறிஞர் என்று அரசனுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தார் அமைச்சர் ஒருவர்.

இப்போது நம்பி, "அரசரே! என் வயலில் இரண்டு இடத்திலிருந்து மண் எடுத்தேன். இரண்டும் முழுக்க முழுக்க வெவ்வேறு தன்மை உடையதாக இருக்கின்றன பாருங்கள்" என்று முதல் மூட்டையிலிருந்த மண்ணை அரசனிடம் காட்டினான்.

அந்த மண்ணை வாங்கிப் பார்த்த அரசன், "சாதாரண மண்தான்" என்றான். பிறகு நம்பி அடுத்த மூட்டையைப் பிரித்தான். அவ்வளவுதான். எங்கும் இனிய மணம் பரவியது.

அந்த மண்ணை வாங்கி முகர்ந்து பார்த்தான் அரசன்.

"நம்ப முடிய வில்லையே! என்ன இனிய மணம் இந்த மண்ணுக்கு! இரண்டு மண்களும் ஒரே வயலில் எடுத்தவையா? இதற்கு மட்டும் எப்படி இனிய மணம் வந்தது? சொல்" என்று கேட்டான்.

அதற்கு நம்பி, "அரசே! அழகும் மணமும் மிக்க இனிய மலர் செடிகளைச் சுற்றி இந்த மண் இருந்தது. நீண்டகாலம் அவற்றோடு இருந்ததால் இந்த மண்ணையும் மலரின் இனிய மணம் தழுவிக் கொண்டது. நான் முன்னர் காட்டிய மண், மணம் மிகுந்த மலரின் தொடர்பில்லாத சாதாரண மண். அதனால் மணம் இல்லை. இந்த மண் நமக்கு நல்ல அறிவுரையைத் தருகிறது" என்றான்.

"என்ன அறிவுரை?" என்று கேட்டான் அரசன்.

*"நல்லோர் தொடர்பினால் யாராக இருந்தாலும் நல்லவராக மாறி விடுவார்கள். நீங்களும் அமைச்சர்கள், சான்றோர்கள் அறிவுரைகளைக் கேட்டு நடந்தால் நாடு வளம் மிக்க பொன்னாடாகி விடும்" என்றான்.*

*நல்லறிவு பெற்ற அரசன் அன்றிலிருந்து அறிஞர்களின் அறிவுரைகளைக் கேட்டு நாட்டை ஆளத் தொடங்கினான்.*

**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல். – குறள் (443); பெரியாரைத் துணைகோடல்**

*பெரியோரைப் போற்றி தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.*

---

***நீ**ச்சல் தெரியாத ஒருவன் படகில் பயணிக்கும்போது தவறி ஆற்றில் விழுந்து விட்டான். தண்ணீருக்கு மேலே வந்த அவன், "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அலறியபடி நீரில் தத்தளிக்கத் தொடங்கினான்.*

*அதைக் கண்டு படகில் இருந்த ஒருவன் தத்தளிப்பவனைப் பார்த்து, "கையை நீட்டு, உன் கையைப் பிடித்து இழுத்துக் காப்பாற்றுகிறேன்" என்று கத்தினான்.*

*தத்தளித்துக் கொண்டிருந்தவனோ கையை நீட்ட வில்லை. தண்ணீரைக் கைகளால் அடித்தபடி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான்.*

*மீண்டும் அவனைப் பார்த்து, "உன் கையை நீட்டு. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்று கத்தினான்.*

*இதைப் பார்த்த அங்கிருந்த ஒருவர், "நீ உண்மையிலேயே அவனைக் காப்பாற்ற நினைக்கிறாயா? உன் கையை நீட்டி அவன் கையை பிடித்து வெளியே இழு. நீ எத்தனை முறை கத்தினாலும் அவன் நீட்ட போவதில்லை. உதவி செய்பவன்தான் முயற்சி செய்ய வேண்டும் உதவி கேட்பவன் அல்ல" என்றார்.*

*உடனே, படகில் இருந்தவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவனைத் தன் கையை நீட்டி இழுத்துக் காப்பாற்றினான்.*

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னுஞ் செருக்கு. – குறள்(613); ஆள்வினையுடைமை**

*பிறர்க்கு உதவி செய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.*

---

***அ**ரசன் ஒருவன் தன் நாட்டு அறிஞர்களை எல்லாம் வரவழைத்தான். "எனக்கு ஒரு சிக்கல், உங்களில் யார் இதைத் தீர்த்து வைக்கின்றீர்கள் பார்ப்போம்" என்று கூறி அவர்களை ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றான்.*

"இதோ இந்த அறையின் ஒரு பக்கம் மூடியிருக்கிற கதவைப் பாருங்கள். இதுதான் நம் நாட்டிலேயே மிகக் கனமானதும் பெரியதும் ஆகும். என்னால் இந்தக் கதவைத் திறக்க முடியவில்லை. நீங்கள் யாராவது எந்த முறையையாவது கையாண்டு இதைத் திறக்க முடியுமா? பாருங்கள்" என்றான்.

அந்தப் பெரிய கதவினைப் பார்த்த உடனே பலர், "எங்களால் முடியாது அரசே" என்றனர்.

மற்றும் சிலர் அந்தக் கதவின் அருகே சென்று மேலும் கீழும் பார்த்தனர். உதட்டைப் பிதுக்கியவாறு திரும்பினார்கள்.

ஆனால் ஒரே ஒருவன் மட்டும் முயற்சி செய்து கதவைத் திறப்போம் என்று நினைத்தான். அதில் கை வைத்துத் தள்ளினான்.

என்ன வியப்பு! கதவின் பின்புறம் தாழ்ப்பாள் போடாததால் கதவு திறந்து கொண்டது.

இதைப் பார்த்த மற்றவர்கள் நாம் முயற்சி செய்யாமல் விட்டுவிட்டோமே என்று தலை கவிழ்ந்தார்கள்.

அவர்களைப் பார்த்து அரசன், "நீங்களாக ஏதோ நினைத்து உங்களால் முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டீர்கள், முயற்சி செய்த பின் முடிவுக்கு வருவதே அறிவுடைமை" என்றான்.

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும். - குறள்(611); ஆள்வினையுடைமை**

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும்.

**திருச்சிற்றம்பலம்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அனபு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அனபரகளின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# தெய்வத் தீந்தமிழ்
# திருஅருட்பா



உருவெளியே உருவெளிக்குள் உற்றவெளி உருவே
உருநடுவும் வெளிநடுவும் ஒன்றான ஒன்றே
பெருவெளியே பெருவெளியில் பெருஞ்ஜோதி மயமே
பெருஞ்ஜோதி மயநடுவே பிறங்குதனிப் பொருளே
மருஒழியா மலர்அகத்தே வயங்கு ஒளி மணியே
மந்திரமே தந்திரமே மதிப்பரிய மருந்தே
திருஒழியா தோங்குமணி மன்றில்நடத் தரசே
சிறுமொழிஎன் றிகழாதே சேர்த்துமகிழ்ந் தருளே. 1

நான்என்றும் தான்என்றும் நாடாத நிலையில்
ஞானவடி வாய்விளங்கும் வானநடு நிலையே
ஊன்என்றும் உயிர்என்றும் குறியாமே முழுதும்
ஒருவடிவாம் திருவடிவம் உவந்தளித்த பதியே
தேன்என்றும் கரும்பென்றும் செப்பரிதாய் மனமும்
தேகமும்உள் ளுயிர்உணர்வும் தித்திக்கும் சுவையே
வான்என்றும் ஒளிஎன்றும் வகுப்பரிதாம் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே. 2

படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டேன் இனிநான்
பயப்படவும் மாட்டேன்நும் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டேன் ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மைஇது நும்மாணை விளம்பினன்நும் அடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவும் மாட்டேன்
கிளர்ஒளிஅம் பலத்தாடல் வளர்ஒளிநும் அல்லால்
நடமாட்டேன் என்உளத்தே நான்சாக மாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்தான் ஆனேனே. 3

உன்னைமறந் திடுவேனோ மறப்பரியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்ஆணை இதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவாய் எனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்
அகிலம்எலாம் அளித்திடும்நின் அருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி எனக்குவிரைந் தருளே. 4

திருச்சிற்றம்பலம்

# இறை பரிசில்

ஒரு ஞானி தனது கிராமத்தின் அடிப்படை தேவைகளுக்காக தன்னுடைய நண்பரான அரசனை சந்திக்கச் சென்றார். அப்பொழுது அரசன் இறைப்பிரார்த்தனையில் இருப்பதாக மெய்காப்பாளர் கூறினாலும், ஞானி அரசனின் நண்பரென்பதால் அவரை உள்ளே செல்ல அனுமதித்தார். ஆனால் ஞானியின் எண்ணத்திற்கு மாறாக மன்னன் இறைவனிடத்தில் தனது கருவூலம் தங்கத்தால் நிரம்ப வேண்டும் என்றும், தன் அரண்மனை முழுவதும் விலையுயர்ந்த பொருளால் நிரம்பி வழிய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். இவ்வாறு மன்னன் பிரார்த்தனை செய்வதைக் கண்டு திகைப்படைந்த ஞானி தனது கிராமத்திற்கு வேண்டியவற்றை இவர் யாரிடம் கேட்கிறாரோ தானும் அவரிடமே கேட்டுகொள்ளலாம் என்று எண்ணி வந்த வழியே திரும்பினார்.

இது ஒரு பழங்கால கதை. இதுபோல், எவ்வாறு இறைவனிடத்தில் வேண்டுவது, எதனை வேண்டிப் பெறுவது என்பதை மனிதயினம் முழுமையாக அறிந்திருக்கவில்லை.

அக்காலத்தில் நாடாளும் அரசனை புகழ்ந்து பாடி, பாணர்கள் பொன்னும் பொருளும் ஈட்டினார்கள். அளவுகடந்த நெடுங்காலமாய் மெய்யடியார்கள் உயிர்குலத்தின் அரசனாம் இறைவனின் அளவிலா ஆற்றலை புகழ்ந்து பாடிப் பணிந்து தொழுது பெற்ற பேறுகளால் இதுநாள்வரை போற்றப்படுகின்றனர்.

அவ்வாறே மெய்யடியார்கள் இறைவனிடத்தில் தாங்கள் பிரார்த்தனை செய்த முறைமையை மற்றையர்களும் பின்பற்ற வேண்டும் என்றெண்ணி அருளியுள்ளார்கள்.

இக்காலத்தில் மனிதன் தன் வாழ்க்கையில் அவனுடைய உலகாயத தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளவே காலம் கடத்துவதால் அவனால் இறைவழிபாட்டில் முழுமையாக கவனம் செலுத்துவதில்லை.

**விழுத்தலை நெறியை விரும்பிலேன்**
**கரும்பின் மிகஇனிக்கின்றநின் புகழ்கள்**
**வழுத்தலை அறியேன் மக்களே மனையே**
**வாழ்க்கையே துணைஎன மதித்துக்**
**கொழுத்தலை மனத்துப் புழுத்தலைப் புலையேன்**
**கொக்கனேன் செக்கினைப் பலகால்**
**இழுத்தலை எருதேன் உழத்தலே உடையேன்**
**என்னினும் காத்தருள் எனையே** – **திருஅருட்பா**

மேற்கூறிய அருட்பா பாசுரத்தில் வள்ளல் பெருமானார், சிறந்த பக்தி நெறியை விரும்பாமலும்; கரும்பின் மிக இனிக்கின்ற

கடவுளின் புகழ்தனை விரும்பித் தொழ அறியாமலும்; மனைவி, மக்கள், துணை என இவையே வாழ்வென நம்பி அதில் விழுந்து பெரிதும் உழல்கின்ற கொழுத்த மனத்தை உடையவனாய் இருக்கின்றேன். இகலோக போக வாழ்க்கையிலேயே உழன்று செக்கினை இழுத்துக் கொண்டு சுற்றவரும் எருதுபோல இருக்கின்றேன் என்று ஜீவர்களாகிய நம்முடைய குறைகளை தன் குறைகளாக பாவித்து இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார்.

மேலும் தன் சுயநலத்திற்காக கடவுளிடம் நேர்த்திக்கடன், பரிகாரம் மற்றும் காணிக்கை என்ற பெயரில் வழிபாடு செய்வதனை காமிய பத்தி என நம் ஞானிகள் விளம்புகின்றனர். இவ்வாறு சுயநலமாய் செய்கின்ற பத்தியால் யாதொரு பெரிய லாபத்தையும் நாம் பெற முடியாது.

இதற்காகவே நம் ஞானிகள் சுத்த பத்தியை உணர்த்தும் வகையில் புராண இதிகாசங்களில் பல அடியார்களின் கதைகளையும் அதன்மூலம் இறைபக்தியையும், அதனால் ஏற்படுகின்ற அனுபவங்களையும் மனித குலத்திற்கு அருளியுள்ளார்கள்.

உண்மை அடியார்களின் இதயத்தில் அனுபவமாய் கலந்து இனிக்கின்ற கருணை வடிவான தெய்வமே என நமது வள்ளல் பெருமானார் திருஅருட்பாவில் அருளுயுள்ளமை இதற்குச் சான்று.

மெய்யடியார்கள் இறைவன்பால் கொண்டிருந்த அன்பிற்கும் பத்திக்கும் எல்லையேயில்லை. அவர்கள் ஊனுருகி உளமுருகி இறையின்பத்தை அனுபவித்து ஆனந்தம் கொண்டாடி தாங்கள் பெற்ற அனுபவங்களை மனித குலத்திற்கு விளக்கவே பத்திமார்க்கத்தை வகுத்தருளினார்கள்.

**நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே**
**நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால்**
**உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
**வனைந்து வனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர் – திருஅருட்பா**

மேற்கூறிய பாசுரத்தில் நம் வள்ளல் பெருமானார் இறைவனிடம் எவ்விதம் பக்தி செலுத்தவேண்டும் என விளம்புகின்றார். முதலில் ஜீவர்களாகிய நாம் நம்முடைய சிறுமைக் குணங்களை நினைக்க வேண்டும். நாம் எத்தகைய குற்றம் உடையவர்களாக இருந்தாலும் கருணைக் கடலாகிய அக்குற்றங்களை குணமாக் கொண்டு நம்மைக் காத்து வழிநடத்துகின்றாரே இறைவன், அந்த பெறுமையை நினைக்க வேண்டும். இவ்விதம் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து அன்பு நிறைந்து கல்மனம் கரைந்து உருகி கண்களில் கண்ணீர் பெருகி இறைவனை போற்றிப் புகழ வேண்டும். இதுதான் உண்மையான பக்தி. மேலும்

*நம் பெருமானார் உரைநடைப் பகுதியில் "உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்க" என அருளியுள்ளதை கருத்தில் கொள்ள வேண்டும். நம் மாணிக்க வாசகப் பெருந்தகையும்,*

**உற்றாறை யான்வேண்டேன்**
**ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாறை யான்வேண்டேன்**
**கற்பனவும் இனியமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையுங்**
**கூத்தாஉன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக்**
**கசிந்துருக வேண்டுவனே – திருவாசகம்**

*என இறைவனிடத்தே, தனக்கு உறவினர்கள் யாரும் வேண்டாம், ஊரும் வேண்டாம், பேரும் புகழும் வேண்டாம், வெறும் ஏட்டுக் கல்வியைப் படித்துவிட்டு தர்க்கம் செய்வோர் உறவும் வேண்டாம், இனி கற்றவை எல்லாம் போதும். கன்று தன் தாய்பசுவை நோக்கிப் பாலுண்ண கதறுவதுபோல இறைவா உன்னை நினைத்து தான் உருக வரம் அருள்வாயாக என்று கதறுகிறார்.*

*இதுபோல் தாயுமான சுவாமிகள், அருணகிரிநாதர் போன்ற எண்ணற்ற ஞானிகளும் தவசீலர்களும் இறைவன்பால் அன்புகொண்டு இடைவிடாது நினைத்து, உருகி, கடவுளின் இன்ப அனுபவத்தை பெற்று திளைப்பதையே விரும்பி வேண்டினர்.*

*இப்படி இறைவனிடத்தில் காதல் கொண்டு பத்தியில் தோய்ந்த அடியார்கள் பலர் அவரையே தன் தாயாகவும், தந்தையாகவும், கணவனாகவும் மற்றும் உற்ற உறவாகவும் எண்ணி எவ்விடத்திலும் எப்பொருளிளும் இறைவனையே கண்டு களிப்புற்று, எந்த சூழ்நிலையிலும் தன் காதல் மாறாது வாழ்ந்தனர். இவர்கள்தம் வாழ்வு பத்திநெறிபாற்படும் பத்தருக்கு வழிகாட்டுவதாய் அமைந்துள்ளமை சிறப்பு.*

*நம் வள்ளல் பெருமானார் பத்தி செய்யும் முறைமையைக் கூறுகையில் "பத்தியம் சிறிதும் உற்றிலேன் நின்பால் பத்தி ஒன்றில்லேன்" என்கிறார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான வழிவொன்று இங்கு காட்டப்படுகின்றது. அதாவது பத்தி செலுத்த வேண்டுமானால் பத்தியம் அவசியம். அந்த பத்தியம் எதுவெனப் பட்டியலிடுகின்றார் நம் கருணை வள்ளல். பத்திமார்க்கத்தில் கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆன்ம இயற்கை குணமாகிய ஜீவகாருண்யம் ஆகியன முக்கிய சத்துவ குணங்களாம். பக்தி என்பது சத்துவ குணத்தை லட்சியமாகக் கொண்டது. மேலும் பத்தி வலைப்படுவோர் திட சித்தமும், ஞானமாகிய நித்திய அநித்திய விவேக அறிவையும்*

பெற்றிருத்தல் அவசியம். இஃதன்றி ஒரு சாதகர் பத்தி மார்க்கத்தில் பயணிக்க முடியாது.

இப்பத்தி மார்க்கத்தில் முதல்படி ஆலய வழிபாடு. இவ்வழிபாட்டை எவ்வண்ணம் செய்ய வேண்டுமென திருமூல தேவநாயனார் இயம்புகின்றார். இதனைக் காண்போம்.

**நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்**
**தேடித் திரிந்து சிவபெரு மான்என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.**

இதன்கண் பத்திநெறி நிற்போரின் திருத்தொண்டு ஓதப் பெறுகின்றது. கடவுள், தன் அடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு காலம் வெளிப்பட்டு அருள்கின்ற திருநாடு, திருநகரம், திருக்கோவில் முதலியவற்றைத் தலையன்பால் தேடித்திரிந்து 'ஆலயம் தானும் அரனெனத்தொழுமே' என்றபடி இடையறாது தொழுவர், அங்ஙனம் தொழுவோர்க்கு அகம்புறமாய் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலுமாம். அவ்வாறு செய்கின்ற நல்லுள்ளங்களை தெய்வம் திருக்கோவிலாகக் கொண்டருளும். பந்த பாசத்தின் வழி உழலும் பாமரர்களாகிய ஜீவர்கள் சிவ பாசத்தின் வழி நிற்கச் செய்யவே ஆலய வழிபாடு நம் ஞானிகளால் உருவாக்கப்பட்டது என்பதை உணர்க. இங்கு கவனிக்க வேண்டுவது சடங்குகள் செய்வது முக்கியமல்ல கடவுளை நினைப்பதே முக்கியம்.

அன்பர்களே! இதுவரையில், மனிதர்கள் இறைவனிடத்தில் எதை வேண்டுகின்றார்கள், மெய்யடியார்கள் எதை வேண்டுகின்றார்கள் எவ்விதமான அனுபவத்தை பெற்றார்கள் என்பதை ஆய்ந்தளித்தோம்.

இனி இறை வழிபாட்டின் நோக்கம் என்னவென்பதை சுருங்கக் கூற வேண்டின், **"கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாதலே கடவுள் வழிபாடு"** என்பார் நம் வள்ளல் பெருமானார். கடவுள் சத்து, சித்து, ஆனந்த மயமானவர். இங்கு ஆனந்தம் என்பது எந்தவித காரண காரணிகளுமின்றி இன்பமாக இருப்பது. எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் குறைவுபடாத ஆனந்தம் அது.

சிற்றின்ப சுகத்தில் வாழும் ஜீவர்களாகிய நாம் பேரின்பத்தில் திளைக்க வேண்டுமானால் ஒரு குருவின் துணைகொண்டு அவர் காட்டிய நெறி நின்று கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆன்ம இயற்கை குணமாகிய ஜீவகாருண்யம் போன்ற சத்துவ குணங்களை வளர்த்து இறைவனை என்றும் மறவாது சிந்தித்து இறை பரிசிலாகிய பேரின்பத்தைப் பெற்று வாழ்வோம்.

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

HABITUAL READER

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# நீத்தார் பெருமை

குறளதிகாரம் ஓர் ஆய்வு

*அருவான ஆன்மா கருவாகிய உருவுக்குள் புகுந்து உயிராகி உலகியல் வாழ்வில் பயணிக்கிறது. அருவாகிய ஆன்மா தன்னைப் பிணைத்துள்ள விலங்குகளை உடைத்தெறிந்து விடுபட்டு இறைவனுடன் ஐக்கியமாதல் அல்லது இறைமைப் பேறடைதல் என்ற நிலைக்குச் செல்லவேண்டும். ஆன்மப் பயணத்தில் இது ஒரு சுழற்சி. இச்சுழற்சி எப்போது முடிவுறும் என்பது உருவோடு பயணிக்கும் உயிர் பெறும் பக்குவத்தைப் பொறுத்தது. பக்குவம் பெற்று ஒரே சுழற்சியில் பயணம் முடிவதும் உண்டு; பக்குவம் பெறாமையால் சுழற்சி முடிவுறாமல் பயணம் நீள்வதும் உண்டு. உயிரின் உலகியல் சுழற்சி ஒன்றாயினும், பலவாயினும் அதன் உலகியல் பயணத்திற்கு உணவாக்கித் தருவதும், உணவாவதும் மழை நீர் என்கிறது குறள் அதிகாரம்.*

*பருவ காலங்களில் மழை பொழிதலும் பொய்த்தலும் எவ்வாறு நிகழ்கின்றன என்பதை வானிலை ஆய்வுகள் விரிவாகக் கூறுகின்றன. ஆனால், இந்நிகழ்வுகளுக்கான மூல காரணத்தை இவை ஆராய்வதில்லை. இந்த ஆராய்ச்சி அறிவியல் கருவிகட்கு அப்பாற் பட்டது. 'நல்லார் ஒருவர் உளரேல் எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்ற தொடரும் 'நெல்லுக்கு இரைத்த நீர் ஆங்கே புல்லுக்கும் பொசியும்' என்ற தொடரும் வீணுரைகள் அல்ல.*

*நாட்டில் வாழும் நல்லவர்கள் மிகச் சிலரே ஆயினும் அவர்கள்தாம் ஒட்டுமொத்த சமுதாயத்தை வழிநடத்தும் வல்லவர்களாக விளங்குவர். யார் இந்த நல்லவர்கள்?* **தன்னலத்தை ஊக்குவிக்கும் அவாவும், பிறர் நலனைக் கெடுக்கும் அழுக்காறும் இல்லாதவர்களே நல்லவர்கள்.** *இவர்களை நீத்தார், துறந்தார், ஐந்தவித்தார், பெரியர், நிறைமொழி மாந்தர், குணக்குன்று, அந்தணர் என்ற தொடர்களால் குறள் குறிக்கிறது.*

*எள் முனையளவும் மாசில்லாத மனம் உடைய இவர்தம் உள்ளம் இறைவன் உறையும் குடிலாகத் திகழ்கிறது. இவர்கள் மனிதவடிவில் நடமாடும் தெய்வமாக உள்ளனர். இவர்கள் இறைவனைப் போலவே எல்லா உயிரினங்களிடமும் அன்புடையவர்கள். இவர்களுடைய இருப்பால்தான் இயற்கையின் இயக்கத்தில் ஒழுங்கும், இல்லற, துறவற, அரசியல், பொருளாதார, சமூகப் பணிகளின் தொடர்ச்சியும் நடைபெறுகின்றன.*

*நீத்தார் இல்லாத உலகில் இயற்கை வளம் குன்றும்; சமூக வாழ்க்கைக் கூறுகள் சிதைந்து போகும். எனவே இல்லறம், துறவறம், அகவாழ்க்கை, புறவாழ்க்கை முதலிய கூறுகள் அனைத்திலும் நீத்தார்*

*பெருமையை மனித குலம் நினைவுகூற வேண்டும். இவ்விதம் எல்லாக் கருத்துகட்கும் 'நீத்தார் பெருமை' ஓர் அடிப்படைத் தத்துவம் என்பதை உணர்த்த இவ்வதிகாரத்தை பாயிரத்துள் ஒன்றாக வைத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை.*

*உலகியல் பற்று இல்லாதவனும் உச்ச நிலையிலான ஞானம் உடையவனுமாகிய தத்துவ ஞானியான மன்னனின் ஆளுகையில் நாடு வளம் பெறும்; மக்கள் நலம் பெறுவர் என்று கிரேக்கத் தத்துவ ஞானி பிளேட்டோ கூறிய கருத்து இங்கு நினைக்கத்தக்கது. "பற்றறுத்த தத்துவ ஞானம் உடைய மன்னன்" எனப் பிளேட்டோ கூறுவதும், "நீத்தார்" என வள்ளுவர் கூறுவதும் ஓரளவுக்கு ஒத்திருக்கக் காணலாம்.*

**தன்னுடைய இம்மை நலன்கள், மறுமைப் பேறுகள் எனத் தன்னல நோக்கில் துறவறம் கொள்வோரெல்லாம் நீத்தார் ஆகார். தன்னலம் சிறிதுமின்றி பிறர் நலம் பேணும் ஒழுக்கத்தின் பொருட்டு உலகியல் பற்றுகள் அனைத்தையும் முற்றிலுமாகத் துறந்து, 'தான்' எனும் தன்மையும் இழுந்து பிறர்நலம் பேணி வாழும் மாந்தர்களே நீத்தார் எனப்படுவர்.** *இத்தகைய நீத்தாரின் பெருமையைச் சிறந்தவற்றுள் எல்லாம் சிறந்ததாக அரசும், சமுதாயமும் விரும்பி ஏற்க வேண்டும். நீத்தார் பெருமையை ஏற்றுப் போற்றும் சமுதாயம் ஏற்றம் காணும்; ஏற்க மறுக்கும் சமுதாயம் சிதைந்து போகும்.*

*உலகம் தோன்றிய நாள் முதலாக இன்றுவரை இறந்தவர் எண்ணிக்கையை எவராலும் கணக்கிட்டுக் கூற முடியாது. இவ்வாறே, உலக உயிரினங்களின் வாழ்வியல் ஒழுங்கிற்காகத் தன்னலம் ஏதுமின்றி வாழ்ந்த, வாழும் துறவோரின் பெருமையை எவ்வகை அலகாலும் அளவிட்டுக் கூறமுடியாது. இறைவனுக்கு எல்லையில்லை என்பதைப்போல நீத்தார் பெருமைக்கும் எல்லையில்லை.*

*நீத்தார் பெருமை என்பது பெருமை வகை அனைத்தையும் விஞ்சிய பெருமை ஆகும். உலகியல் வாழ்வில் உயிர்கள் மாட்டு அன்பு காட்டியும், அறஞ்செய்தும் பெருமை உடையவர்கள் இல்லறத்திலும் துறவறத்திலும் பலர் உளர். இவர்கள், இம்மையில் துன்பம் தவிர்த்து இன்பம் பெறவும், மறுமையில் பிறப்பைத் தவிர்த்துப் பேரின்பத்தில் திளைக்கவும் எண்ணிச் செயல்படுவர். இவர்களின் பெருமை எல்லைக்கு உட்பட்டது. தன்னல நோக்குடையது. ஆனால் இம்மை, மறுமைப் பயன்களை எண்ணாமல், எந்தச் சுழ்நிலையிலும் இடையறாது அறப்பணிகள் செய்வதே தம் கடமை என உறுதி பூண்ட நீத்தார்களின் பெருமை எல்லையற்றது. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தொடர்*

இங்கு எண்ணத்தக்கது. இத்தகைய நீத்தார் பெருமையே உலகை வழிநடத்தும். உலகின் கண் அழியாது நிலைத்து நிற்கும்.

மனிதனுக்கு கிடைத்துள்ள ஐந்து பொறிகளும் யானையின் வலிமை கொண்டவை. இவை மனித மனத்தை உலகியல் களங்களுக்கு ஈர்க்கும் இயல்புடையவை. யானைப் பாகன் துறடு எனும் எளிய கோல்கொண்டு வலிமை மிக்க யானையையும் தன்னுடைய நோக்கத்திற்கு ஏற்பத் திருப்ப வல்லவன். இதுபோல் **அறிவு எனும் கருவிகொண்டு ஐம்பொறிகளையும் உள்நோக்கித் திருப்ப வல்ல மாந்தர்கள் நீத்தாராக, துறவோராக விளங்குகின்றனர்.** இத்தகையோர் வானுலகம் சென்று மீண்டும் முளைத்துத் தழைத்து வழிகாட்டும் முதிர்ந்த வித்தாக விளங்குவர். இவர்கள் முதிர்ந்த ஞானம் பெற்றவர்கள் என்பதால் பிறரைப்போல உலகியல் வாழ்விற்கு வந்து பிறவிச் சூழலில் சிக்கி உழல மாட்டார்கள்.

ஐம்பொறிகளையும் அவற்றுக்குரிய புலன்கள்பால் திரிந்தலைய விடாமல் ஞானத்தால் அடக்க வல்லவர்கள் முற்றும் துறந்த முனிவர்கள். இவர்களின் ஆற்றல் அளப்பரியது. இறையாற்றலுக்கு நிகரானது. வானில் உலவும் தேவர்களின் அரசன் இந்திரனும் சுகபோகங்களில் ஆசையும் பற்றும் உடைய தன்னலம் மிக்கவன் என்பதால் இவர்தம் ஆற்றலுக்கு அஞ்சுவான். சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கும் திறமுடைய துறவோர் ஆற்றலுக்கு நிகர் ஏதுமில்லை.

செய்து முடிப்பதற்கு அரியதான செயல்களை செய்வோரைப் பெரியர் என்றும் அரிய செயல்களைத் தவிர்த்து எளியவற்றையே செய்து காலம் கழிப்பவரை சிறியர் என்றும் மக்களை இருவகைப்படுத்துகிறார் வள்ளுவர். அரிய செயல் ஆற்றும் துறவோர் எனும் பெரியர் மிகச் சிலரே. எனினும், இச்சிலரே உலகின் வழிகாட்டிகளாக விளங்குவர்.

உலகில் உள்ளவையாவும் ஐம்பூதங்களின் கூட்டே என்பது தத்துவ ஆய்வின் முடிபு. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் மூல பூதங்கள். இவற்றின் இயல்பான தன்மை முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை ஆகியன. இவை உட்புகும் வாயில்கள் முறையே மூக்கு, வாய், கண், மெய், செவி ஆகிய ஐம்பொறிகள் ஆகும். முகர்தல், சுவைத்தல், காண்டல், உறுதல், கேட்டல் ஆகிய ஐந்தும் முறையே ஐம்பொறிகளின் செயல்கள். இத்தத்துவங்களின் வகையை, இயல்பை, தாக்கத்தை அறிந்து தெளிந்து அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஞானியர்தம் ஆணையில் உலகம் இயங்குகிறது. முற்றும் துறந்த முனிவர்கள், ஞானியர்கள் ஆகியோர் சொல்லும் சொற்கள் ஒருபோதும் பொய்க்காது. இவர்களின் கூற்று

நிறைமொழி எனப்படும். இந்நிறைமொழி வாழ்த்தாகவும் இருக்கலாம் சாபமாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் அது அவர்களின் கட்டளையாகிப் பலித்துவிடும். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம்' எனத் தொல்காப்பியர் கூறியுள்ளமை இதனை உறுதிப் படுத்துகிறது. ஞானியர் சொற்கள் மந்திரங்களாகி உலகில் நிலைத்து நிற்கும்.

நீத்தார் என்போர் இயல்பாகவே அகப்பற்றும், புறப்பற்றும் அறவே இல்லாதவர்கள். அவர்கள் நற்பண்புகள் அனைத்தின் தொகுப்பாக வாழ்பவர்கள். இத்தகையோர் எப்போதும் நல்லதைச் சொல்வோராகவே இருப்பர். எனினும், குணக்குன்றாக விளங்கும் இவர்களையும் அறியாமல் சினம் எழுமானால் அச்சினத்தை நொடிப்பொழுதும் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ எவராலும் இயலாது. அவ்வாறு வெளிப்படும் சினம் அச்சினத்திற்குக் காரணமானோரைத் தாக்குவது திண்ணம். முனிவர்களின் சினத்திற்கு ஆட்பட்டு அவதிபட்ட மன்னர்கள், தேவர்கள் தொடர்பான புராணக் கதைகள் பல உண்டு. நீத்தார்களின் அளப்பரிய பெருமைக்கும் ஆற்றலுக்கும் முழுமுதற் காரணம் அவர்கள் மேற்கொள்ளும் அறவாழ்க்கை. இவர்கள் எவ்வித வேறுபாடும் எள்ளளவும் காட்டாமல் எல்லா உயிர்களிடத்தும் அன்பையும், அருளையுமே வெளிப்படுத்துவார்கள். இத்தகைய இயல்புடையோரை வள்ளுவர் அந்தணர் என்றும் அறவோர் என்றும் சுட்டுகிறார்.

ஒரு நாட்டின் இயற்கை வளம் பொய்க்காதிருக்கவும், தனி மனித மனம் செம்மையுறவும், சமூக வாழ்க்கை ஒழுக்கமுடையதாக அமையவும் நீத்தார்கள் நிறைவுடன் வாழவேண்டும். அவர்கள் சினம் கொள்ளாது அமைதியாக வாழ்வதற்கான சூழல் நிலவ வேண்டும். நீத்தாரின் ஆதரவும் அருளும் இல்லாமல் உலகியல் அறங்களும் அவற்றின் கூறுகளும் ஒழுங்குடன் நடவா என்பதை வள்ளுவர் உறுதிப் படுத்துகிறார்.

**அன்புடைய நின்அடியர் பொன்அடியை உன்னும்அவர்**
**அடிமலர் முடிக்கணிந்தோர்க்கு**
**அவலமுறுமோ காமம் வெகுளிஉறுமோ மனத்து**
**அற்பமும் விகற்பம் உறுமோ**
**தன்புகழ்செய் சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**

**– திருஅருட்பா**

**!திருச்சிற்றம்பலம்!**

## பாடலும் பொருளும்

தானே தயவால் சிறியேற்குத்
தனித்த ஞான அமுதளித்த
தாயே எல்லாச் சுதந்தரமும்
தந்த கருணை எந்தாயே
ஊனே விளங்க ஊனமிலா
ஒளிபெற்று எல்லா உலகமும்என்
உடைமை யாக்கொண் டருள்நிலைமேல்
உற்றேன் உன்றன் அருளாலே
வானே மதிக்கச் சாகாத
வரனாய் எல்லாம் வல்லசித்தே
வயங்க உனையுட் கலந்துகொண்டேன்
வகுக்குந் தொழிலே முதலைந்தும்
நானே புரிகின் றேன்புரிதல்
நானோ நீயோ நான்அறியேன்
நான்நீ என்னும் பேதம்இலா
நடஞ்செய் கருணை நாயகனே. – திருஅருட்பா 4627

**ஞான அமுதளித்த; எல்லாச் சுதந்தரமும்:**

*அமுதம் போல் நிலைத்த வாழ்வு தருவதாகலின், சிவஞானத்தைை, "ஞானவமுது" என்று சிறப்பிக்கின்றார். சுதந்திரம் என்பது ஐந்தொழில்புரிய, வேண்டிய தடையிலாத முற்றுரிமை.*

**ஊனே விளங்க ஊனமிலா ஒளிபெற்று**

*உடம்பின் உள்ளும் புறத்தும் குறைபடா நிறைவுற ஞானவொளி பெறப்படுதல் பற்றி,"ஊனமிலா ஒளி பெற்று" என்கின்றார்.*

**எல்லா உலகமும்என் உடைமையாக் கொண்டு அருள்நிலைமேல் உற்றேன் உன்றன் அருளாலே**

*தாம் பெற்ற அருளொளியால் உலகனைத்தையும் தமக்குரிய பொருளாக உணர்கின்றமை புலப்பட, "எல்லா வுலகமும் என் உடைமையாகக்கொண்டு அருள்நிலை மேல் உற்றேன்" எனவும், அதற்குக் காரணம் பரம்பொருளின் பேரருள் என்றற்கு, "உன்றன் அருளாலே" எனவும் இயம்புகின்றார். அருள்நிலை மேல் என்றது, அருட் சத்தியின் மேனிலையாகிய சுத்தசிவ நிலை.*

**வானே மதிக்கச் சாகாத வரனாய் எல்லாம் வல்லசித்தே வயங்க உனையுட் கலந்துகொண்டேன்**

*அச்சுத்த சிவநிலை ஞானமே உருவமாக அமைந்ததாகலின், அதனைத் தேவர்கள் போற்றுவது இயல்பாதல் பற்றி, "வானே மதிக்க" என்றும், அத்தேவர்கள் வள்ளலார் எய்திய சாகா வரம் மேன்மையானது என்பது விளங்க, "சாகா வரனாய்" என்றும் அறிவிக்கின்றார். எல்லாம் செயல்வல்ல பொருள் அசித்தாக மாட்டாமையின், "எல்லாம் வல்ல சித்தே வயங்க" என்றும், அத்தகைய சித்துப் பொருள் எய்தியவிடத்து எல்லாம் வல்லனாகும் ஆற்றல் தானே அமைதலால், "உனையுட் கலந்து கொண்டேன்" என தான் பெற்ற பெரும் பேற்றை வியந்து உரைக்கின்றார்.*

**வகுக்குந் தொழிலே முதலைந்தும் நானே புரிகின்றேன்**

*இறைவனை உட்கலந்து கொண்டதால் ஐந்தொழில் ஆற்றல் குறித்து "வகுக்கும் தொழிலே முதல் ஐந்தும் நானே புரிகின்றேன்" என மொழிகின்றார். இவ்விடத்து வகுக்கும் தொழில் என்பது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பதாம்.*

**நான்நீ என்னும் பேதம்இலா நடஞ்செய் கருணை நாயகனே**

*நான் வேறு நீ வேறு என்று எண்ணாதபடி அத்துவிதமாதல் விளங்க, "நான் நீ என்னும் பேதமிலா நடஞ்செய் கருணை நாயகனே" என்றார்.*

**புரிதல் நானோ நீயோ நான்அறியேன்**

*நானும் நீயும் ஒன்றியிருந்து இத்தொழில்கள் ஐந்தையும் செய்வதால் செய்பவன் நானோ நீயோ எனப் பிரித்தறிய மாட்டேனாயினேன் என்பாராய், "புரிதல் நானோ நீயோ நான் அறியேன்" என்றும் சொல்லுகின்றார்.*

**உரை:** *தானே என்பாற் கொண்ட கருணையால் சிறுமையுடைய எனக்கு ஞானமாகிய அமிர்தினை யளித்தருளிய தாயாகியவனே! எல்லா உரிமைகளையும் எனக்குத் தந்தருளிய கருணை நிறைந்த தந்தை யாகியவனே! உடம்பெங்கும் விளக்கமுறக் குற்றமில்லாத ஞானவொளி பெற்று உலகனைத்தையும் எனக்குரிய உடைமையாகக்கொண்டு திருவருள் மேனிலையை உனது திருவருளால் எய்தியுள்ளேன்; வானகத்துத் தேவர்கள் கண்டு என்னை நன்கு மதிக்குமாறு சாகாமைக் குரிய வரமுடையவனாய் எல்லாம் செயல்வல்ல அறிவாற்றல் விளங்க உன்னை என்னுட் கலந்து கொண்டேன்; அதனால் படைக்கும் தொழில் முதலாகவுள்ள ஐந்தொழில்களையும் நானே செய்கின்றேன்; செய்யுமிடத்து செய்வது நானோ நீயோ என்று நான் பிரித்தறிய மாட்டேனாகின்றேன்; காரணம், நான் வேறு நீ வேறு எனப் பிரித்தறியாவாறு ஒன்றிய திருநடனம் செய்கின்ற கருணையே உருவாகிய தலைவனாதலால்.*

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**பிண்டமும் அதில்உறு பிண்டமும் அவற்றுள 1293**
**பண்டமும் காட்டிய பராபர மணியே 1294**

| | | |
|---|---|---|
| பிண்டமும் | - | பிண்டமாகிய நமது தூல உடம்பையும் |
| அதிலுறு பிண்டமும் | - | அதிலுள்ள சூக்கும உடம்புகளையும் |
| அவற்றுள பண்டமும் | - | அவற்றிலுள்ள பொருள்களையும் |
| காட்டிய | - | எனக்குக் காட்டிய |
| பராபர மணியே | - | பராபரமணியாம் அருட்பெருஞ்ஜோதியே |
| அண்டம் | - | பிரபஞ்சம்; பேரண்டம்; Macrocosm |
| பிண்டம் | - | உடம்பு; சிற்றண்டம்; Microcosm |

எளிதில் புரிந்துகொள்ள வேண்டியதற்காக அண்டத்தை உலகம் என்று கூறுவது வழக்கத்திலுள்ளது. நாமும் இங்கே அண்டத்தை உலகம் என்று வைத்துக்கொள்ளுவோம்.

அண்டமாகிய உலகமும் பிண்டமாகிய உடம்பும் பஞ்ச பூதங்களால் ஆனவை.

உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என்கிறது தொல்காப்பியச் சூத்திரம்.

உடம்பும் பஞ்சபூதங்களால் ஆனது. மக்கள் உடம்பு மட்டுமன்று; அனைத்துயிர்களின் உடம்புகளும் பஞ்சபூதங்களால் ஆனவையே. உலகப் பொருள்கள் அனைத்தும் பஞ்சபூத அணுக்களின் சேர்க்கையே.

"அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில்" என்றொரு முதுமொழி உண்டு, "அண்டத்தைவிடப் பிண்டம் விசாலமானது" என்று நம் வள்ளற்பெருமான் கூறியுள்ளார்! நம்ப முடிகிறதா? நமக்குத் தெரியாது; அவ்வளவுதான். வள்ளற்பெருமான் கூறுவது முற்றிலும் உண்மை. அண்டத்தைப்பற்றியும் பிண்டத்தைப் பற்றியும் நாம் அறிந்தது எவ்வளவு? அறியாதவை எவ்வளவு? அறிந்தது கைம்மண்ணளவு; அறியாதது உலகளவு.

பெரிதாக உள்ள ஏதாவது ஒன்றைப் பார்த்தால் பிரம்மாண்டமாக இருக்கிறது என்று சொல்கிறோம். பிரம்மாண்டம் என்று கல்வியறிவு மிகவும் குறைந்த சாதாரணப் பெருமக்களும் சொல்லக் காண்கிறோம்.

*பிரம்மாண்டத்தைவிடப் பெரியது நமக்குத் தெரியவில்லை. நமக்கு தெரிந்த பெரியது பிரம்மாண்டம்தான்.*

*பிரம்மாண்டம் என்பது பிரமனுடைய அண்டம். பிரம்மன் வசிக்கும் உலகம் (பிரம்மலோகம்). பிரமன் அண்டத்தைவிட விஷ்ணு அண்டம் பெரியது, உருத்திரன் சதாசிவ அண்டம் அதைவிடப் பெரியது. விந்துநாத அண்டங்கள் சத்திசிவ அண்டங்கள். முற்கூறிய எல்லாவற்றினும் பெரியவை. ஒன்றின் ஒன்று பெரியவை. இவற்றையெல்லாம் வள்ளலார் கூறுகிறார், அளவிட்டுக் கூறுகிறார். நடராஜபதி மாலையில் ஒரு பாட்டு:*

*ஒரு* ***பிரமன் அண்டங்கள்*** *அடிமுடிப்பெருமையே*
*உன்ன முடியா, அவற்றின்*
*ஓராயிரங்கோடி* ***மால்அண்டம், அரன்அண்டம்***
*உற்றகோடாகோடியே*
*திருகலறு பலகோடி* ***ஈசன்அண்டம், சதா***
***சிவஅண்டம்*** *எண்ணிறந்த,*
*திகழ்கின்ற மற்றைப் பெருஞ்* ***சத்திசத்தர்*** *தம்*
***சீரண்டம்*** *என்புகலுவேன்*
*உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்*
*உறுசிறு அணுக்களாக*
*ஊடசைய, அவ்வெளியின் நடுநின்று நடனமிடும்*
*ஒருபெருங் கருணை அரசே*
*மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா*
*வரந்தந்த மெய்த் தந்தையே*
*மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வமே எலாம்*
*வல்ல நடராஜ பதியே - நடராஜபதிமாலை 18*

*பிரமன் அண்டங்களின் பேரளவு எண்ணிப்பார்க்க முடியாது. பிரமன் அண்டம் என்று ஒருமையிற்கூறவில்லை, அண்டங்கள் என்று பன்மையிற் கூறுகிறார். அடுத்து அவற்றின் என்று கூறுகிறார். இதனால் பிரமனுக்குப் பல அண்டங்கள் உள்ளன என்பது தெரிகிறது. அவன் ஓர் அண்டத்தில் வசிக்கிறான். அவன் அதிகாரத்தில் பல அண்டங்கள் உள்ளன.*

*பிரமன் அண்டங்களைவிட ஓராயிரம் கோடி பெரியது மால் அண்டம். அதைவிடக் கோடிகோடி பெரியது அரன் அண்டம். அதைவிடப் பலகோடி பெரியது ஈசன் அண்டம். எண்ணிறந்த கோடி பெரியது சதாசிவ அண்டம். சத்தி சத்தர்களின் சீர்அண்டங்களை நான் என்னவென்று சொல்லுவேன்?!*

*இந்த அண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில் சிறு அணுக்களாக ஊடு அசைகின்றன. அருள்வெளியில் இடை இடையே ஆங்காங்கே*

சிறுசிறு அணுக்களாக இந்த அண்டங்களெல்லாம் அசைந்து கொண்டிருக்கின்றன. அந்த அருள்வெளியின் நடுவிலேநின்று நடனமிடும் ஒரு பெருங்கருணை அரசனாகிய நடராஜபதி, என்னை மகனாக்கி ஆட்கொண்டு அழியா வரந்தந்தார் என்கிறார் வள்ளற்பெருமான். இவையெல்லாம் அண்டத்தின் பெருமை.

இனி பிண்டத்தின் பெருமை எப்படிப்பட்டது என்பதை இரத்தினச் சுருக்கமாகச் நம் வள்ளல் பெருமானார் **"அண்டத்தைவிடப் பிண்டம் விசாலமானது"** என்று இயம்புகின்றார்.

அண்டங்கள் ஒண்றிரண்டு அல்ல மிகப்பல. பிண்டங்கள் அவற்றைவிடப்பல. அண்டங்களின் தொகையைவிடப் பிண்டங்களின் தொகை மிகுதி (எண்ணிக்கை அதிகம்). எண்ணிறந்த இவ்வண்டங்களிலும் பிண்டங்களிலும் உள்ள பண்டங்களின் (பொருள்களின்) வகைதொகை அளவிடற்கரியவை. இதையும் பெருமான் சொல்லுகிறார். மகாதேவமாலையில் ஒரு பாட்டு (11):

**அண்டங்கள்** பலவாகி, அவற்றின் மேலும்
அளவாகி, அளவாத அதீதமாகிப்,
**பிண்டங்கள்** அனந்தவகை யாகிப், பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப், பேதந்தோற்றும்
பண்டங்கள் பலவாகி, இவற்றைக் காக்கும்
பதியாகி, ஆனந்தம் பழுத்துச் சாந்தம்
கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைத்து ஞானக்
கொழுங்கடவுள் தருவாகிக் குலவும் தேவே - 2081

அண்டங்களைப் பற்றியும் பிண்டங்களைப் பற்றியும் அவற்றுள் உள்ள பண்டங்களைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வள்ளற்பெருமான் விரும்பினார், ஆசைப்பட்டார். "ஆசைப்பட்ட" என்ற சொல்லையே இங்கு பெருமான் பயன்படுத்தியுள்ளார். வள்ளற்பெருமான் ஆசைப்பட்டதை அறிந்து அருட்பெருஞ்ஜோதிப் பெருமான் அவை எல்லாவற்றையும் தெரிவித்தார். எப்படித் தெரிவித்தார்? அறிவைத் தூண்டித் தெரிவித்தார். "அறிவைத்தூண்டி" என்ற சொல்லையே இங்கு வள்ளலார் பயன்படுத்தியுள்ளார்.

**அண்டப்பரப்பின்** திறங்கள் அனைத்தும் அறிய வேண்டியே
ஆசைப்பட்ட தறிந்து தெரித்தாய் அறிவைத் தூண்டியே
**பிண்டத்துயிர்கள்** பொருந்தும் வகையும் பிண்டம் தன்னையே
பிரியும்வகையும் பிரியா வகையும் தெரித்தாய் பின்னையே

**- மெய்யருள்வியப்பு 31**

**அண்டகோடி** அனைத்தும் காணும் கண்கள் எய்தியே
அறிந்தேன் அங்கைக் கனிபோல் அவற்றில் உள்ள செய்தியே
**பிண்டகோடி** முழுதும் காணப் பெற்று நின்னையே
பேசிப்பேசி வியக்கின்றேன்இப் பிறவி தன்னையே

– **மெய்யருள்வியப்பு** *93*

*நாமும் ஆசைப்பட்டால் நம் அறிவைத் தூண்டி ஆண்டவர் தெரிவிப்பார்.*

*இது அண்டத்தைப் பற்றிய செய்தி. இனிச் சொல்லப்போவது பிண்டத்தைப் பற்றிய பெரிய செய்தி.*

*பிண்டத்தில் உயிர்கள் பொருந்தும் வகை, பிண்டத்தை விட்டுப் பிரியும் வகை, பிரியாத வகை இம்மூன்றையும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தெரிவித்தாராம்.*

**பிண்டத்தில் உயிர்கள் பொருந்தும் வகை என்பது உடம்பில் உயிர் சேரும்வகை – கரு உற்பத்தியும் பிறப்பும். பிரியும் வகை என்பது இறப்பு, மரணம். பிரியாவகை என்பது இறப்பில்லா இன்பவாழ்வு, மரணமிலாப் பெருவாழ்வு.**


*உடம்பில் உயிர்பொருந்தும் வகை, பிரியும் வகை, பிரியாத வகை - இவை பெரிய விஷயங்கள் (செய்திகள்) அன்றோ! இவ்வரிய பெரிய விஷயங்களெல்லாம் வள்ளற் பெருமானுக்கு எளிய சிறிய விஷயங்களாயின.*

*விஷயம் என்பதைச் செய்தி என்று நல்ல தமிழில், அழகு தமிழில், பழகு தமிழில் பெருமான் கூறும் அழகே அழகு! அருமையே அருமை!*


*அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள பண்டமும் பரம்பரமணி காட்டிற்று. பரம்பர மணியாக இருந்து அருட்பெருஞ்ஜோதியே காட்டிற்று. அதுபோல் பிண்டமும் அதில் உறுபிண்டமும் அவற்றுள பண்டமும் பராபரமணி காட்டிற்று. பராபரமணியாக இருந்து அருட்பெருஞ்ஜோதியே காட்டிற்று. இவை அண்ட பிண்டங்களையும் அவற்றிலுள்ள பண்டங்களையும் வள்ளலார் கண்ட வகை, வள்ளலாருக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் காட்டிய வகை.*

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.



## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ்

அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் வந்தனம். உத்தர ஞான சிதம்பரம் என்று போற்றப்படும் வடலூர் பெருவெளியில் நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் நிறுவப்பட்ட சத்திய ஞானசபையில் ஞான நிறைவு நாளாம் தைப்பூச தினத்தன்று ஜோதி தரிசனப் பெருவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவானது நிகழும் ஹேவிளம்பி வருடம் தை திங்கள் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (30.01.2018) கொடியேற்றத்துடன் துவங்கி, தை 18ஆம் நாள் புதன்கிழமையன்று (31.01.2018) ஏழு திரை நீக்கி தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா பல்வேறு ஆன்மீக சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. உலகம் முழுவதிலிருந்தும் சன்மார்க்க சாதுக்களும், ஞானிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள். இந்த விழாவில் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மற்றும் நண்பர்களும் கலந்துகொண்டு தொண்டு செய்து, ஜோதி தரிசனம் கண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவருளைப் பெற்று வாழ்வில் எல்லா வளங்களையும் அடைய அன்புடன் அழைகின்றோம்.

ஜனவரி
31
2018

அவ்வமயம் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வடலூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் அமைந்துள்ள **TRM சாந்தி திருமண மண்டபத்திலும்** வடலூர் சத்திய ஞானசபை ஆர்ச் ரோட்டில் **அருட்ஜோதி அரங்க மேடை** அமைத்தும்

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- அன்னதானம்
- மகாமந்திர வேள்வி
- திருஅருட்பா இசை நிகழ்ச்சி

போன்ற சன்மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியைப் பொருளாகவோ, நிதியாகவோ அளித்து இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொள்ளலாம். தங்களின் நன்கொடைகளுக்கு 80G பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. நன்கொடை அளிக்க விரும்புவோர் வங்கி விபரத்திற்கு பக்கம் எண் 23ஐ பார்க்கவும்.

## ஆறுகால ஜோதி தரிசன விபரம்

**நாள்: 31.01.2018**

காலை 6.00, 10.00, மதியம் 1.00,
இரவு 7.00, 10.00

**மறுநாள்: 01.02.2018**

காலை 5:00

## சித்திவளாகத் திருவறை தரிசனம்

**நாள்: 02.02.2018 வெள்ளிக்கிழமை**

இடம்: மேட்டுக்குப்பம்

நேரம்: பகல் 12.00 முதல்
மாலை 5.00 வரை

**அனைவரும் வருக! வருக!**

தொடர்புக்கு: +91 8838540176, +91 9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly December 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை



அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

சென்னையில்...

## சன்மார்க்க ஆன்மிக சத்சங்க விழா



ஜனவரி
07
2018
ஞாயிறு

**இடம்: ஸ்ரீ குகா திருமண மண்டபம்,**
44/13, காந்தி தெரு,
ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம்,
சென்னை – 600 095.

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

**அனைவரும் அருள் பெற வருக! வருக!!**

தொடர்புக்கு: +91 75020 26565, +91 63801 11475

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865